இமாம் ஷா*ஃ*பி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

# செய்திமலர்

ஜீலை 2023

மாணவர்களால் மாதந்தோறும் மலரும் மலர்

## மாதாந்திர ஹதீஸ்

தனது ஆயுள் அதிகமாக்கப்பட வேண்டும், தனது ரிஸ்க் விசாலமாக வேண்டும் என்று எவர் விரும்புகின்றாரோ, அவர் தன் பெற்றோருடன் அழகிய முறையில் நடந்து கொள்ளட்டும், உறவினர்களை சேர்த்து வாழட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக்.

நூல்: முஸ்னத் அஹ்மத்




## விமான கனவை நனவாக்கிய எனது பள்ளி

நான் ஒரு விமானி (PILOT) ஆக வேண்டும் என்பது என் கனவு. இது எனது கனவு மட்டும் அல்ல. பெரும்பான்மையான மாணவர்களின் கனவு. இந்த கனவிற்கு அடித்தளமாக அமைந்த நிகழ்வு தான் எம் பள்ளியின் "AIR SHOW" நிகழ்ச்சி.

PROPELLER TECHNOLOGY குழுவின் உதவியால் விமானத்தை இயக்குவது எப்படி? மற்றும் அதனை உருவாக்குவது எப்படி? என்பதனை பயிற்சியின் மூலம் கற்பித்தனர். அதில், ஆர்வம் உள்ள மாணவர்கள் கலந்து கொண்டனர்.

எம் பள்ளியில் கடந்த வருடம்(AIR SHOW) விமான நிகழ்ச்சி ஏப்ரல் 25-அன்று நடைபெற்றது. இதன் சிறப்பு என்னவெனில், மாணவர்களே விமானத்தை இயக்கினர். AIR SHOW நிகழ்ச்சிக்கு பெற்றோர்கள் அனைவரும் வருகை தந்து,இளம் விமானிகளான எம் பள்ளி மாணவர்கள் விமானத்தை இயக்குவதைக் கண்டு பாராட்டு தெரிவித்தனர்.

எம் பள்ளியின் புதுமையான தொலைநோக்கு சிந்தனையே, இதற்கு காரணமாகும். மாணவர்கள் புத்தக அறிவைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், கல்வியை வாழ்வில் செயல்படுத்தவும் பல முயற்சிகளை எம் பள்ளி மேற்கொண்டு வருகிறது என்பதனைக் கூறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

முகமது ஃபஹிம் .S IX-STD

## மனித நேயம்

மனிதர்கள் பிறப்பினால் அனைவரும் சமமானவர்களே; மற்றவர்கள் மீது உயர்வு தாழ்வுகள் இல்லாமல் அனைவரின் மீதும் அன்பு செலுத்துபவனே உண்மையான மனிதன் ஆவான். ஒருவருக்கொருவர் உதவி செய்து மனிதநேயத்துடன் வாழ வேண்டும். மனிதன் என்பது வெறும் வார்த்தை அல்ல; இயற்கையினுடைய மிகப்பெரிய படைப்பு. நமது உலகத்தில் மனிதநேயம் என்ற ஒன்று இல்லாமல் இருந்திருந்தால், உலகம் எப்போதோ அழிந்திருக்கும். ஒருவர் படும் துன்பங்களைக் கண்டு, நம் கண்களில் கண்ணீர் பெருகும் என்றால், அதுவும் மனிதநேயமே .




தனக்காக மட்டுமே வாழ்பவர்கள் மனிதர்கள். மற்றவர்களுக்காக வாழ்ந்து, மக்கள் மனதில் உயர்ந்தவர்கள் புனிதர்கள், அப்துல் கலாம், அபுல்கலாம் ஆசாத்,காயிதே மில்லத் போன்றோர் தம் வாழ்க்கை முழுவதையும் உலகத்திற்காக அர்ப்பணித்த மகான்கள் ஆவார்கள் . அரவணைக்கும் உதவிக்கரங்கள் துன்பத்தின் கண்ணீரைத் துடைக்கும்; இலக்கை நோக்கி பயணிக்க வைக்கும்; நன்னெறிகளை வளர்த்திடும்; நல்வாழ்விற்கு வழிவகுக்கும்.

மனிதா! மனித நேயத்துடன் நடந்திடு!
மானிடர் வாழ்விற்குச் சேவைகள் பல புரிந்திடு !
தன்னிகரில்லா தலைவனாய் உயர்ந்திடு!

அ.ஹஸ்னா.VIII -STD

## வானம் வசப்படும்



நம்முடைய எண்ணங்கள், செயல்பாடுகள், முயற்சிகள் உழைப்புகள் யாவும் வானத்தையே எட்டும் அளவுக்கு இருக்க வேண்டும். நம் மனதில் தோன்றும் எண்ணங்கள் தூய்மையாக இருக்க வேண்டும். நேர்மைகளைக் கொண்டு கண்கள் பிரகாசிக்க வேண்டும். நாம் நினைத்த சாதனைகளைப் பெற்றிட முழு மனதோடும் விடாமுயற்சியுடனும் இருந்தால் வானத்தையே நிச்சயமாக வசப்படுத்த முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நாம் செய்யும் காரியம் அனைத்துமே சுலபமாக அமைவதில்லை. ஆனால், விடாமுயற்சியோடு நாம் செய்யும் போது, அது சாத்தியமாகிறது.

மேலும் இளைஞர்களுக்கு, முன்மாதிரியாக திகழ்ந்து வானத்தை வசப்படுத்தியவர்களான அப்துல் கலாம், ஹெலன் கெல்லர் போன்றோர்களை நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் சாதிப்பதற்கு,பல தடைகளைக் கடந்து முன்னேறி வந்துள்ளனர். அதேபோல் பெண்களும் ஒவ்வொரு குறிக்கோளுடன் இருந்து, தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வானத்தையே வசப்படுத்திக் கொள்ள முடியும்.

வியர்வை சிந்த விடாமுயற்சி செய்!
விண்ணைத் தாண்டிடும் தன்னம்பிக்கை பிறக்கும் !

**R.A.யுசைரா XI-STD**

## வானம் வசப்படும் (கவிதை)



தோல்வியைக் கண்டு கலங்காதே !
தோல்விதான் வெற்றியின் முதல் படி !
முயற்சியை கைவிடாதே - அது
உன்னை மேம்படுத்தும் !
ஒற்றை முயற்சியால் ஒரு துணையின்றி
கற்றதைக் கொண்டு கடைசி வரை முயற்சிசெய் !
உன் முயற்சிக்கு என்றோ நீ வென்று விட்டாய் !
விடாமுயற்சியும் வெற்றிகரமான நகர்வும்
என்றும் நீ வெற்றி பெற களம் அமைக்கும் !
காலங்கள் பல கூறும் !
நீ கொண்ட கோலங்கள் மாறும் !
அடுத்தவரை பாராதே!
உயிருள்ளவரைத் தொடர்ந்திடு !
ஒரு நாள் அந்த வானம் வசப்படும் .

உன்னை நான் பார்த்தேன் !
உன்னைப்போல் விழாமல் இருக்க எண்ணினேன் !
உன்னை பிடிக்க யாருமில்லை என்றாலும் நீ வீழ்வதில்லை !
உன்னை பார்த்து வியந்தேன் !
ஆறு காலங்களிலும் மாறி மாறி வரும்
இயற்கையின் விதி எதுவாக இருந்தாலும்
நீ இயற்றும் மாயம் என்னை உன்னிடம் இழுத்தது !
உன்னைப் பார்த்து உன்னைப் போல் இருக்க எண்ணுகிறேன் !



**அ. சாத் -XI STD**

## தன்னம்பிக்கை (கவிதை)



எனக்குள் உன்னை புதைத்தேன் !
நடக்க ஆரம்பித்தேன் !
கண்ணில் கண்ணீர் வந்தாலும்
உன்னை மனதில் நினைத்தேன்! சிரித்தேன் !
பிறர் என் மேல் வைப்பது அவ நம்பிக்கையாக இருந்தாலும்
நான் என் மேல் வைப்பது தன்னம்பிக்கை!
எனக்குள் உன்னை புதைத்தேன்!
வெளியில் புன்னகை விரித்தேன் !
பிறர் உங்கள் மீது அவநம்பிக்கை வைத்தாலும்
உங்கள் மீது தன்னம்பிக்கை வையுங்கள்!
வாழ்வில் வெற்றி பெறுங்கள்!

**ராஅட்சயா X-STD**

# எனது விடுமுறை காலம்



கோடை விடுமுறை என்பது மாணவர்களின் வாழ்க்கையில் மிகவும் எதிர்பார்க்கப்படும் நேரம். அன்றாட வழக்கத்திலிருந்து ஓய்வெடுக்கவும் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நேரத்தை கழிக்கும் வகையில் அமைகிறது. ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் தங்கள் கோடை விடுமுறையை ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனது கோடை விடுமுறையில் நான் மிகவும் வேடிக்கையாக இருந்தேன். புதிய செயல்களைச் செய்தேன். எனக்கு தோட்ட வேலை செய்வது, நண்பர்களுடன் விளையாடுவது மிகவும் பிடிக்கும். கோடை விடுமுறையில் நான், என் தாத்தா பாட்டியைச் சந்தித்தேன்.

தாத்தாவுடன் சேர்ந்து செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவது, பாட்டியுடன் சேர்ந்து சுவையான உணவுகள் தயார் செய்வது, மொட்டை மாடியில் கண்ணாமூச்சி விளையாடுவது போன்றவை மிகவும் புதிய அனுபவமாக இருந்தது. தாத்தாவும் பாட்டியும் கூறும் பழைய கதைகள், புதிய கதைகள் எல்லாம் அருமையாக இருக்கும் .. கதைகள் கேட்பதினால் என் அறிவு சற்று கற்பனையுடன் சிந்திக்க ஆரம்பித்தது. அதனால், நானும் சிறு சிறு கதைகளை சித்தரித்து என் பாட்டியிடம் கூறினேன்.

கோடைக்காலம் என்பது மன அழுத்தம் இல்லாத, உல்லாச பயணங்களை மேற்கொள்வதற்கும் இயற்கையுடன் நெருங்கி பழகுவதற்கும் ஒரு சிறந்த நேரமாகும். அதனால் ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலை பிரதேசங்களுக்குச் சென்று இயற்கையின் அதிசயங்களைக் கண்டு களித்தேன். எனது அன்பான குடும்ப உறவுகளுடனும் இயற்கையுடனும் அதிக நேரத்தைச் செலவு செய்ததனால், எனது உடலும் உள்ளமும் புத்துணர்வு பெற்றது .

**A.அஜீம் VI-STD**

# வகுப்பறை பற்றிய எனது கனவு



எனது கனவுகள் , ஆசைகளை அடைய, நமது அறிவு மற்றும் திறமையை பயன்படுத்த வேண்டும் . இளம் வயதில் நமது கனவு மற்றும் ஆசைகளை வளர்க்கும் இடமாக வகுப்பறை உள்ளது. ஒரு வகுப்பறை என்பது உலகெங்கிலும் உள்ள இணையற்ற இடமாகும். அங்கு குழந்தைகள், தங்கள் வாழ்நாளில் பல வருடங்களைக் கற்றலுக்காகவும் வளர்ச்சிக்காகவும் செலவிடுகிறார்கள். சமுதாயத்திற்கு வழிவகுக்கும் முக்கியமான வாழ்க்கை பாடங்களைப் பற்றி நமக்கு கற்பிப்பதில் தவிர்க்க முடியாத பங்கை வகுப்பறை பெறுகிறது. இது ஒரு நேர்மையான சூழலில் அறிவு மற்றும் திறன்களைப் பெற வழிவகுக்கிறது.


கனவு காணும் வாழ்க்கையில், அதிக உயரத்திற்கு உயரவும் நம்மை ஊக்குவிக்கவும் உதவுகிறது. இது மாணவ மாணவியர்களை வெளி உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் குழந்தைகளுக்கு, புது அனுபவத்தை வழங்குகிறது. அங்கு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவரது இலக்குகளை கற்பனை செய்து லட்சியங்களை அடைவதற்கான அடித்தளத்தை அமைத்து உதவி செய்கிறார்கள்.

உதாரணமாக வால்ட் டிஸ்னி என்பவர், சிறந்த அனிமேட்டராக அறியப்பட்டார். அவரது நான்காவது வயதிலேயே, தனது முதல் அனிமேஷனை வரையத் தொடங்கினார். மேலும் வாழ்க்கையில், என்ன சாதிக்க வேண்டும்? என்பதை ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்தார். டிஸ்னி தடைகளை சமாளிக்கும் ஒரு சிறந்த திறனை கொண்டிருந்தார். அந்த திறன் வகுப்பறை கல்வியின் மூலம் வழங்கப்பட்டது. வகுப்பறை ஒரு குழந்தைக்கு நிகரற்ற தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சியைத் தோற்றுவிக்கிறது, கனவுகள் இல்லாமல் குழந்தைகள் தொலைந்து போவார்கள்; இலக்கற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் வாழ்வதற்கு, ஒரு நிகழ்காலத்தை உருவாக்குவதை விட எதிர்காலத்தை சிறந்ததாக மாற்றும் இடமாக வகுப்பறை இருக்க வேண்டும்.

வகுப்பறைக்குச் செல்வோம்!
வாய்மையைக் கடைப்பிடிப்போம்!
வாய்ப்புகளைப் பெறுவோம்!
திறமைகளால் பலவற்றைச் சாதிப்போம்!

**J.முகமது பாசித் VII-STD**

# எனது வாழ்வில் திருக்குறளின் பங்கு .



ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாக சொல்லப்படும் திருக்குறள், முக்காலத்திற்கும் பொருந்தும் வாழ்வியல் தத்துவங்களை மிக அழகாக கூறியுள்ளது. ஏழு சீர்களில் எழுதப்பட்ட வெண்பாக்கள் என்றாலும் உலக மக்கள் அனைவருக்கும் பொருத்தமான கருத்துகளைக் கொண்டுள்ளது. இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்வை வளப்படுத்துகிறது. தமிழர்களுக்குக் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது .

சராசரி மனிதன் முதல் சாம்ராஜ்யங்களை ஆளும் அரசன் வரை அன்றாடம் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாக திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. போட்டியும் பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்கு கொண்டு செல்லும். 'ஈகை குணம் ஒன்றே' மனிதனை மாண்புடையவனாக்கும். வள்ளுவர், 'ஈகை குணமே உயிரின் ஊதியம்' என்கிறார். ஆண் பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாக காணப்படுகிறது. பெண்களின் உரிமைக்காகவும் உலகியல் மாற்றத்திற்காகவும் பொருத்தமான செயல்களைக் குறளில் கையாண்டு உள்ளார்.

சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

குடும்ப உறவுகளின் கடமைகளைச் சொல்லும் குறட்பாக்கள் கவனிக்கத்தக்கவை.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

மகனின் கடமையை சொல்கிறது. இதன்படி நானும் என் தந்தைக்குப் பெருமையை தேடி தருவேன்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

என்பதன் மூலம் இருப்பதை பகிர்ந்து உண்டு, பல உயிர்களைப் பாதுகாப்பதே நூல் எழுதியவர்கள் தொகுத்த அறங்களில் எல்லாம் அறமாகும். வள்ளுவனின் வாய்மொழி வாழ்க்கையில் கிடைத்த பொன்மொழி ,

நற்பெயர் பெற்றிட நாள்தோறும்
பொய்யாமொழியைப் படித்திடுவாய்!
நல்லொழுக்க மிக்கவர்களாகச் சிறந்திடுவாய்!.

**அசிலா XII - C**

## BFD ACTIVITY



I- Std



III - Std




V - Std



VI- Std



VII - Std



VIII - Std